/மின்னஞ்சல்/

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6

ந.க.எண்: 14720/ஜி2/இ3/2020, நாள்: 17.07.2020

----

பொருள்: பள்ளிக் கல்வி - தமிழ்நாடு பள்ளிக்கல்வி கட்டண நிர்ணயக் குழு - கட்டணம் நிர்ணயம் செய்வது சார்பான கருத்துருவினை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்வது சார்பான அறிவரைகள் வழங்குதல்- சார்பு.

பார்வை: 1. தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழு தனி அலுவலரின் கடிதஎண்.523/psfdc/2020, நாள்:14.07.2020

*****

பார்வையில் காணும் தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழு தனி அலுவலரின் கடிதத்தின் வாயிலாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளின் நிர்வாகிகளுக்கு (சி.பி.எஸ்.இ மற்றும் ஐ.சி.எஸ்.இ பள்ளிகள் தவிர்த்து) 2019-20ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவீனங்களின் அடிப்படையில் 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023 நிதி ஆண்டுகளுக்கான கல்வி கட்டணத்திற்கான உரிய கருத்துருவினை 20.07.2020 முதல் 25.09.2020 க்குள் கீழ்காணும் கட்டண நிர்ணயக் குழுவின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட உரிய அறிவுரைகளை வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**"tnfeecommittee.com".**

எனவே, இதன் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு கட்டண நிர்ணயக் குழுவால் கோரப்பட்ட விவரத்தினை காலதாமதமின்றி இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும் மேலும் 25.09.2020க்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் காலக்கெடுவினை நீட்டிக்க இயலாது என சார்ந்த பள்ளிகளின் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்துமாறு முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இது மிகவும் அவசரம்.**

17/07/202

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்

தனி அலுவலர்,
தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயக் குழு,
டி.பி.ஐ வளாகம், சென்னை - 600 006.

F:\G2\S3\003614.Doc